செய்தி வெளியீடு எண் : 2122 நாள் : 21.10.2023

செய்தி வெளியீடு

**சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ரூ.308.75 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கண்காட்சி மற்றும் மாநாட்டு அரங்க கட்டட கட்டுமானப் பணிகளையும், நெடுஞ்சாலைத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால்வாய், கால்வாய் தூர்வாரும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.**

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ரூ.308.75 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கண்காட்சி மற்றும் மாநாட்டு அரங்க கட்டட கட்டுமானப் பணிகளையும், நெடுஞ்சாலைத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால்வாய், கால்வாய் தூர்வாரும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

.

**சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையம் – கூடுதல் கண்காட்சி மற்றும் மாநாட்டு அரங்க கட்டட கட்டுமானப்பணி**

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தால் ரூ.308.75 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவாக்கத் திட்டப்பணிகளான கூடுதல் கண்காட்சி மற்றும் மாநாட்டு அரங்கத்திற்கான கட்டுமானப்பணி உள்ளிட்ட விரிவாக்கப் பணிகளை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.10.2023) பார்வையிட்டுஆய்வு மேற்கொண்டார்.

இந்த வர்த்தக மையத்தில் 9,00,000 சதுர அடிபரப்பளவில் ரூ.308.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 4000 நபர்கள் அமரக்கூடிய மாநாட்டு அரங்கம் மற்றும் 5 பொருட்காட்சி அரங்கங்கள், 1300 வாகனங்கள் நிறுத்தும் வசதி கொண்ட பன்னடுக்கு வாகன நிறுத்தம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்த தலைமைச் செயலாளர் அவர்கள், வேலையாட்களின் எண்ணிக்கையை அதிகரித்து திட்டப்பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**நெடுஞ்சாலைத்துறை – மழைநீர் வடிகால்வாய் பணி**

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் அவர்கள் நெடுஞ்சாலைத்துறை சார்பில் கிண்டி தொழிற்பேட்டை சிட்கோ சாலையில் ரூ.3.47 கோடி மதிப்பில் 360 மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணியினையும், ஈக்காட்டுத்தாங்கலில் ரூ.5.50 கோடி மதிப்பில் 556 மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினையும், அரும்பாக்கம் பகுதியில் ரூ.5.80 கோடி மதிப்பில் 660 மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினையும், அண்ணா சாலை டி.எம்.எஸ். சந்திப்பில் ரூ.2.77 கோடி

மதிப்பில் 315 மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி – மழைநீர் வடிகால்வாய் மற்றும் வடிகால் தொட்டி அமைக்கும் பணி மேம்பாலத்தின் கீழ் அழகுபடுத்தும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் காந்தி இர்வின் சாலை சந்திப்பு – சென் ஆன்ரூஸ் சர்ச்சில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதி ரூ.1.40 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் தொட்டியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், காந்தி இர்வின் சாலை சந்திப்பில் மாநில பேரிடர் மேலாண்மை நிதி ரூ.1.90 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் பணியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, பாந்தியன் சாலை மேம்பாலத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அழகு படுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, கனேசபுரம் சுரங்கப்பாதையில் மூலதன நிதி ரூ.2.40 கோடி மதிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இரயில்வே துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர்வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும், தரமாகவும், முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**நீர்வளத்துறை – கால்வாய் தூர்வாரும் பணி**

நீர்வளத்துறை சார்பில் விருகம்பாக்கம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணியினையும், திரு.வி.க.நகர் மண்டலம், அம்பேத்கர் சாலையில் ஓட்டேரி நல்லா கால்வாயில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையாளர் டாக்டர். ஜெ ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குனர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.டி.ஜி.வினய், இ.ஆப., இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி.அமித். இ.ஆ.ப., (தெற்கு), திரு.பிரவீன் குமார், இ.ஆப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப, (வடக்கு), மற்றும் வர்த்தக மையம், நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை, மாநகராட்சி தலைமைப் பொறியாளர்கள் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in